# பாடம் 2: கடவுளின் இருத்தல்

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (7 வயது) | : 1 முதல் 5 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (10 வயது) | : 1 முதல் 6 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (13 வயது) | : 1 முதல் 9 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், உங்கள் மறைக்கல்வி உங்களை அழைத்துச் செல்லும் பயணத்தின் அறிமுகம் உங்களுக்குத் தரப்பட்டது. ஓர் அழகியத் தொடக்கம், ஒரு சோகம், ஓர் உச்சக்கட்டம், ஒரு வெற்றிகரமான முடிவைக் கொண்ட ஒரு நீண்ட கதையே கிறிஸ்தவத்தின் கதை என்று உங்களுக்குச் சொல்லப்பட்டது. அதனுடன், நாம் இந்த கதையைத் தற்போது தொடங்குவோம்!

**தற்போதைய பாடம்:**
1. இயற்கை எப்படி செயல்படுகிறது என்பதை நாம் சொந்தமாக கவனிப்பது மற்றும் நமது பகுத்தறிவின் (பொது புத்தி எனவும் அறியப்படுகிறது) ஆற்றலைப் பயன்படுத்துவதன் வழியாக கடவுளின் இருத்தலை நாம் ‘‘உணர்ந்திட’’ முடியும்.

இயற்கை ஒரு குறிப்பிட்ட நுண்ணறிவின் வடிவமைப்பை வெளிக்காட்டுகிறது. நம்மைச் சுற்றி நாம் கவனிக்கிற ஒவ்வொன்றுமே அதன் இருத்தலுக்கான ஒரு நோக்கத்தைக் கொண்டுள்ளது. இப்பொருட்கள் அவற்றின் இருத்தலுக்கு ஒரு நோக்கத்தைக் கொண்டுள்ளதால், அவை நுண்ணறிவுள்ள ஒருவரால் படைக்கப்பட்டவை என்று நாம் நம்புகிறோம்.

2. எடுத்துக்காட்டுக்கு உங்களது பென்சில் அல்லது கைகடிகாரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். இந்தப் பொருட்களை யாரும் உருவாக்கவில்லை, அவை தானாகவே இருக்கின்றன என்று ஒருவர் கூறினால், நீங்கள் அவரை நம்புவீர்களா? கட்டாயமாக இல்லை. ஏனெனில் இந்தப் பொருட்கள் இயல்பில் ‘‘நுண்ணறிவு’’ சார்ந்தவை, அதாவது அவை ஒரு நோக்கத்தை அல்லது பயன்பாட்டைக் கொண்டுள்ளன, அதன் பொருள் அவை ஒரு குறிப்பிட்ட விதத்தில் செயல்பட ஒருவரால் உருவாக்கப்பட்டுள்ளன. அதே விதத்தில், இந்த பிரபஞ்சம் சிறந்த நுண்ணறிவின் வடிவமைப்பைக் கொண்டுள்ளது. கடவுள் இல்லை, மேலும் இந்த பிரபஞ்சம் தானாக திடீரென வந்தது என்று நம்புவதைத் தேர்வுசெய்யும் மக்கள், நல்ல புரிதலை உருவாக்கவில்லை.

ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ காப்புரையாளரான பேராசிரியர் ஜான் லென்னாக்ஸ், கடவுளை நம்பாத தமது உடன் பணியாளர்களிடம் ஒருமுறை கேட்டார், ‘‘சிறப்பான செயல்பாட்டு திறன்களைக் கொண்ட உங்கள் ஆய்வகத்தின் மேற்றிறக்கணினிகள் திடீரென வந்தது என்று நான் உங்களிடம் கூறினால் நீங்கள் நம்புவீர்களா? அவற்றை யாரும் உருவாக்கவில்லை என்று நான் உங்களிடம் கூறினால் நீங்கள் நம்புவீர்களா? இல்லை எனில், உங்கள் ஆய்வகத்தின் மேற்றிறக்கணினிகளை விடவும் மிகுந்த நுண்ணறிவின் வடிவமைப்பான இந்த பிரபஞ்சம் யாராலும் படைக்கப்படாமல், திடீரென்று வந்தது என்று ஏன் நம்புகிறீர்கள்?’’

3. இன்னும், இந்த பிரபஞ்சம் முழுவதுமே, பெரு வெடிப்பு போன்ற ஒரு முற்றான திடீர் நிகழ்வால் இருத்தலுக்கு வந்தது, பின்னர் தகுதியானது வாழும் என்பதன் விளைவாக பல நூறு கோடி ஆண்டுகள் பரிணாமம் நிகழ்ந்தது என நம்பும் அறிவியலாளர்கள் இருக்கின்றனர்.

அதே நேரத்தில், பொருட்களின் சீரற்றத் தொடர்பிணைவால் உயிர் உருவாகும் வாய்ப்புக்கு எதிரான சாத்தியங்களை பல அறிவியலாளர்கள் கணிக்கின்றனர், ஐயத்தில் கொடுக்கப்படும் ஒவ்வொரு வாய்ப்பும் பத்தின் அடுக்கு 119,850ஆக இருக்கிறது (10ஐத் தொடர்ந்து 119,850 பூச்சியங்கள்). இது ஒழுங்கற்ற திடீர் வாய்ப்பால் உயிர் தோன்றவில்லை என்ற அறிவியல் முடிவை உறுதியாக ஒப்புக்கொள்கிறது, ஓர் உச்சநிலை படைப்பாளர் இருக்கிறார்.

படைப்பின் தொடக்கத்தில் இருந்தே, பிரபஞ்சம் விரிவடைந்து கொண்டிருக்கிறது மேலும் நாம் கற்பனை செய்ய முடிந்த விகிதத்தை விடவும் வேகமாகத் தொடர்ந்து விரிவடைகிறது என்றும் அறிவியலாளர்கள் சொல்கின்றனர். இதன் எளிதான பொருள் யாதெனில் கடவுள் இருக்கிறார், மேலும் அவர் இன்னும் படைத்துக் கொண்டிருக்கிறார்!

4. இயற்கையில் ஒரு விசயத்தை நோக்கி அதை ஆய்வு செய்யுங்கள், எகா: ஓர் இலை அல்லது மலர், ஒரு விலங்கு, ஒரு பூச்சி, மற்றவை. அந்த விசயம் எப்படி ஒரு நோக்கத்துடன் "நுண்ணறிவு" சார்ந்ததாக இருக்கிறது, அது எப்படி விபத்தால் வந்திருக்க சாத்தியமற்றது என்பதைக் காணுங்கள். உண்மையில், நீங்களும் ஒரு நோக்கத்துடன் அழகாக உருவாக்கப் பெற்றிருக்கிறீர்கள்! ஆகவே, பூமியில் உங்கள் இருத்தலும் ஒரு விபத்தன்று!

5. தொன்மை கிரேக்க மெய்யிலாளர்களின் காலத்தில், படைப்பாளரைத் தனிப்பட்ட விதத்தில் அறிய முடியவில்லை என்றாலும், உண்மையின் பாதை, அழகு மற்றும் நன்மைத்தனத்தில் (இவை எல்லைகடந்தவை என்று அழைக்கப்பட்டன) மக்கள் தங்களை நிலைநாட்டினால் இந்த படைப்பாளரை அவர்கள் அடையலாம், ஏனெனில் அனைத்து உண்மை, அழகு மற்றும் நன்மைத்தனமும், உச்ச உண்மையும், உச்ச அழகும், உச்ச நன்மைத்தனமுமான அவரைச் சுட்டிக் காட்டுகின்றன. ஆகவே, எது உண்மை, எது நன்மை, மற்றும் எது அழகு என்று எப்பொழுதும் தேடுகின்ற மக்கள், யாரிடம் இருந்து உண்மை, அழகு மற்றும் நன்மைத்தனம் வருகிறதோ அவரை இறுதியாகக் கண்டறிவர்: கடவுள். இது ஏனென்றால் அவரே உண்மை, அழகு, மற்றும் நன்மைத்தனத்தின் தொடக்கமாக இருக்கிறார்.

6. புனித தாமஸ் அக்குயினாஸ் (13ஆம் நூற்றாண்டு திருச்சபை தந்தை மற்றும் திருச்சபை வல்லுநர்) கடவுளின் இருத்தலை ஐந்து விதங்களில் எண்பிக்க முடியும் என நம்பினார்:

அ) உலகத்தில் நகர்வினைக் கவனித்தால், கடவுள் "நகராமல் நகர்த்துகிறராக" இருக்கிறார் என்பதற்கு ஆதாரமாகும். இருக்கின்ற ஒவ்வொரு நகரும் பொருளுக்கும் ஒரு நகர்த்துகிறவர் தேவைப்படுகிறார், ஆனால் அந்த நகர்த்துகிறவர் தாமே ஒரு நகராத நகர்த்துகிறவராக இருக்க வேண்டும். இந்த **நகராத நகர்த்துகிறவரே** கடவுள்.

ஆ) காரணம் மற்றும் விளைவைக் கவனித்தால், அனைத்தின் காரணராக கடவுள் உள்ளதைக் அடையாளம் காணலாம். பிரபஞ்சத்தில் உள்ள தொடர் காரணங்கள் மற்றும் விளைவுகள், தமக்கு காரணமற்ற ஒரு முதல் காரணரைக் கொண்டிருக்க வேண்டும். கடவுளே அந்த **காரணமற்ற காரணர்** அல்லது **முதல் காரணர்**.

இ) அனைத்தின் இருத்தலையும் கவனித்தால், வேறொன்றைச் சார்ந்து இருக்கிறது. இருக்கின்ற அனைத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டால், மற்ற அனைத்தின் இருத்தலும் சார்ந்து இருக்கின்ற ஓர் அவசியமாக இருக்கிறவர் இருக்க வேண்டும். கடவுளே அந்த **அவசியமாக இருக்கிறவர்**.

ஈ) பொருட்களில் மாறுபாடுகள் இருப்பதைக் கவனிக்கலாம், எடுத்துக்காட்டாக, மிகை நேர்மை மற்றும் குறை நேர்மை, மிகை உண்மை அல்லது குறை உண்மை. இத்தகைய மாறுபாடுகளின் இருத்தல், இந்த அனைத்துச் சார்பு மாறுபாடுகளின் தொடக்கப் புள்ளியாக ஒரு முழுமையாக இருக்கிறவரின் இருத்தலைக் காட்டுகிறது. அந்த **முழுமையாக இருக்கிறவர்** கடவுளே.

உ) உலகில் உள்ள பொருட்களின் நடத்தையைக் கவனித்தால் ஒரு **பெரும் வடிவமைப்பாளர்** அல்லது கட்டடக் கலைஞரைக் காட்டுகிறது, அவரே கடவுள்.

7. இன்று தீவிர நாத்திகர்கள், அதாவது, கடவுள் இருக்கிறார் என்பதை மறுக்கின்ற மற்றும் இறை இருப்பினில் நம்பிக்கை கொள்வது மக்களின் மூடத்தனம் என்று வலியுறுத்துகின்ற மக்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது. கடவுள் இருக்கிறார் என்றால், அவரது இருத்தலை அறிவியல் அடிப்படையில் எண்பிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர். அறிவியல் முறையின் வரம்புகளின் காரணமாக இந்த கோரிக்கை பொருளற்றது. அறிவியல் பொருளின் இருத்தலை மட்டுமே கையாள முடியும், இங்கு கடவுள் ஆவியாக இருக்கிறார். இயற்கைக்கு மேற்பட்ட மெய்மைகளை எண்பிக்க கடவுளின் இருத்தல் மனித திறமைக்கு மிகவும் அப்பாற்பட்டது என்றும் கொடுக்கப்பட்டுள்ளது, கடவுளின் இருத்தலை எண்பிக்க நமது தாழ்ந்த முறைகளைப் பயன்படுத்துவது நமது முயற்சிகளை கேலிக்குரியதாக்கும். கடவுளை நுண்ணோக்கி மற்றும் சில வேதியக் கலவைகள் வழியாக எண்பிக்க முடிந்தால், அவர் கடவுளாகவே இருக்க சாத்தியமில்லை!

8. சமூகவியல் ஆய்வின் அடிப்படையில், உலக மக்கள் தொகையில் 84 விழுக்காட்டினர் இன்னும் தங்களை இறை இருத்தலை நம்புகின்ற மக்களாகத் தங்களை அடையாளப்படுத்திக்

கொள்கின்றனர். உலகில் ஆசியா-பசிபிக் பகுதியே மக்கள் தொகையிலும் சமய உணர்விலும் மிகுந்ததாக இருக்கிறது. மேற்கு ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவில் மட்டுமே சமயம் தேய்கின்றது, மாறாக மற்றெங்கும் அது வளர்கிறது. வருங்காலத்தில் இந்த உலகம் இன்னும் அதிகமாக, குறைவாக அன்று, சமய உணர்வுள்ளதாக மாறும் என்று சமூகவியல் ஆய்வு காட்டுகிறது. இது ஏனென்றால், மனிதகுலம் ஒரு படைப்பாளர் இருக்கிறதை பிறப்பிலேயே அறிந்திருக்கிறது, அவரைப் பற்றிய அவர்களின் மாறுபட்டக் கருத்துருவாக்கங்கள் என்னவாக இருந்தாலும் இந்த படைப்பாளருடன் உறவைத் தேடுகின்றனர்.

9. கடவுளை மிகவும் தனிப்பட்ட விதத்தில் மக்கள் அறிய முடிந்த உச்ச வழி *அவருடனான சந்திப்பாக* இருக்கிறது. அவரைப் பற்றிய நமது புரிதலுக்கு ஏரணமும் பகுத்தறிவும் உதவும், ஆனால் அவரை அறியக்கூடிய விதத்தில் அவரை உண்மையாக அறிய அவை நமக்கு உதவாது.